

கோவை வடக்கு மாவட்டம், ஆர்.எஸ்.புரம் பகுதி கழகத்தின் சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் 300க்கும் மேற்பட்டோருக்கு புத்தாடை, இனிப்புகளை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பகுதி கழக செயலாளர் கார்த்திக் செல்வராஜ் முன்னிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி வழங்கினார். இதில் மாமன்ற முன்னாள் உறுப்பினர் அம்சவேணி செல்வராஜ், கிருபா சபரிநாதன், கழக நிர்வாகிகள் ஜெகதீஷ், நாசர், சுலைமான், ஜெயபிரகாஷ், ஆறுச்சாமி, நவ்ஷாத், ஆல்வின், மகேஸ்வரன், ஆறுமுகநயினார், அருண்ராஜ், மோகன், சேகர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நாளை (9ம் தேதி) தேவகோட்டையில்

வே.ரூசாவின் 28ஆவது ஆண்டு நினைவு தினம்!

கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் திமு.க.வினர் மலர் அஞ்சலி!

சிவகங்கை, நவ. 8-

சிவகங்கை மாவட்ட முன்னாள் திமுக இளைஞரணி அமைப்பாளர் மற்றும் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் துணை தலைவர் வே.ரூசோ அவர்கள் கடந்த 8.11.2001ஆம் ஆண்டு மறைவெய்தினார். இவரது நினைவினைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் சிவகங்கை மாவட்ட தி.மு.க மற்றும் ரூசோ குடும்பத்தினர் சார்பில் நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது. இன்று (8ம்தேதி) ரூசோவின் 28ஆம் ஆண்டு நினைவு தினம். இன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நாளை (9 ஆம் தேதி - திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் தேவகோட்டையில் ரூசோவின் 28வது ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்படுகிறது.

தேவகோட்டை தியாகிகள் பூங்காவில் இருந்து முன்னாள் அமைச்சர் , சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ முன்னிலையில் அமைதி பேரணி நடைபெறுகிறது.

தியாகிகள் பூங்காவிலிருந்து ரூசோ நினைவிடம் அமைந்துள்ள ராம் நகர் வரை பேரணியாக சென்று அவரது நினைவிடத்தில் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க. வினர் மற்றும் ரூசோ குடும்பத்தினர் மலர் அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், நகர, கழக நிர்வாகிகள் பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகிறார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை சிவகங்கை மாவட்டக் கழகம் மற்றும் ரூசோ குடும்பத்தினர் செய்து வருகிறார்கள்.

பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைப்பதற்கான

ஆவணங்கள் எதுவும் தங்களிடம் இல்லை! RTI மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு - த.வெ.க. அரசு பதில்!

மீனவ மக்கள் அதிர்ச்சி!

சென்னை, நவ.8-

மீனவ மக்களின் கடும் எதிர்ப்பையும் மீறி, சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட தவெக அரசு தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை இடிக்க ஒப்புந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் வீட்டின் எதிரே தலைமைச் செயலகம் அமைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இந்த விவகாரத்தில் த.வெ.க. அரசு அடாவடியுடன் செயல்பட்டு வருகிறது. இதனால் மீனவ மக்கள் தவெக அரசுக்கு கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

தங்கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்கில் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்ட முற்பட்டால் மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையில், சென்னையை சேர்ந்த சரவணன் என்பவர் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமை செயலகம் அமைப்பது தொடர்பாக RTIல் கேள்வி கேட்டுள்ளார்.

அதில், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்புக்கு எந்த விதி, அரசு வழிகாட்டு தலின் கீழ் சாத்தியக்கூறு அறிக்கை தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது என கோரியிருந்தார். மேலும், ஆயிரத்து 200 கோடி மற்றும் 20 லட்சம் சதுர அடி பரப்பளவு ஆகிய வற்றுக்கான அடிப்படை தொடர்பான ஆணவங்களின் நகலையும் அவர் கேட்டிருந்தார். இந்நிலையில், இந்த மனுவுக்கு பதிலளித்துள்ள RTI, பட்டினப்பாக்கத்தில் தலைமை செயலகம் அமைப்பதற்கான ஆவணங்கள் எதுவும் தங்களிடம் இல்லை என்று கூறியுள்ளது.

வழிப்பறி வழக்கில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சிறுவன்

காவல் நிலையத்திலிருந்து தப்பி ஓட்டம்!

வானகரத்தில் தனிப்படை அமைத்து போலீசார் தேடுதல் வேட்டை!

சென்னை, நவ. 8–

வழிப்பறி வழக்கில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சிறுவன் காவல் நிலையத்திலிருந்து தப்பினான். அவரை தனிப்படை அமைத்து போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். தாம்பரம்மதுரவாயல் பைபாஸ் சாலை, வானகரம் சர்வீஸ் சாலையில் இரவு நேரங்களில் தனியாக செல்பவர்களை குறிவைத்து வழிமறித்து செல்போன்கள், செயின் பறிப்பு சம்பவங்கள் அடிக்கடி நடைபெற்று வந்தன. இதுகுறித்து வானகரம் போலீசாருக்கு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் இருந்தது. இந்நிலையில் தீவிர வாகன சோதனை மற்றும் ரோந்து பணியில் ஈடுபட்ட போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். மேலும் வானகரம் போலீசார் தனிப்படைகள் அமைத்தும் தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் பைக்கில் சென்றவரை வழிமறித்து செல்போன் வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்டதாக முகப்பேர் பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் (20) மற்றும் 17 வயது சிறுவன் ஒருவனையும் போலீசார் மடக்கி பிடித்து விசாரணைக்காக வானகரம் காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் நேற்று அழைத்து வந்தனர். வானகரம் காவல் நிலைய வாசலில் வந்தவுடன் சிறுவனை விசாரணைக்காக இரு சக்கர வாகனத்திலிருந்து இறங்கி போலீஸ் நிலையத்திற்குள் அழைத்துச் செல்ல முயன்றனர். அப்போது திடீரென போலீசாரின் கையை உதறி தள்ளிவிட்டு போலீஸ் பிடியிலிருந்து அந்த சிறுவன் மின்னல் வேகத்தில் அங்கிருந்து தப்பிச் சென்றான்.

இதனை கண்டதும் பணியில் இருந்த போலீசார் அந்த சிறுவனை விரட்டி சென்று பிடிக்க முயன்றனர். ஆனால் அந்த சிறுவன் போலீசாரின் கைகளில் சிக்காமல் தப்பி ஓடிச் சென்று விட்டான். இதையடுத்து வானகரம் போலீசார் தனிப்படைகள் அமைத்து காவல் நிலையத்திலிருந்து தப்பி ஓடிய சிறுவனை தேடி வருகின்றனர். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள சுங்கச் சாவடி மற்றும் செக்போஸ்ட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உஷார் படுத்தப்பட்டு போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். மேலும் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டு தப்பி ஓடிய சிறுவன் மீது பல்வேறு வழிப்பறி வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. வழிப்பறி வழக்கில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட சிறுவன் காவல் நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு சிறைச்சாலை மற்றும் காவல் நிலையங்களில் இருந்து கைதிகள் தப்பிச் செல்வது தொடர்கதையாக உள்ள நிலையில் வானகரம் காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக் கைதி தப்பி சென்ற சம்பவம் போலீசார் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு பண்டிகை முன்னிட்டு புத்தாடைகள் மற்றும் இனிப்புகளை மாவட்ட பொருளாளர் ஆர். வி. ஸ்ரீ ராம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர அவைத்தலைவர் மாணிக்கம், ஆத்தூர் தெற்கு நகர செயலாளர் ராமச்சந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள் மீனாட்சி வேலுமணி, அருணா சக்தி, சாந்தி, பிரபா குமார், கங்கையம்மாள் ரவி, யசோதா கோபி, சந்திர ராமச்சந்திரன், சத்யா விஜய், சங்கர், அருண்குமார், ஆவின் செல்வமணி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் ராஜ்மோகனின் கேள்வியும் நம்முடைய பதிலும்!



தி.மு.க. கட்டியதை விளம்பரத்துக்காக திறந்து வைத்த விஜய்! பெரியார் அறிவுலகம் முறை கேட்டில் த.வெ.க. அரசு சிக்கியது எப்படி?*

கோவை காந்திபுரத்தில் பிரம்மாண்டமாக கட்டப் பட்டுள்ள பெரியார் அறிவுலகம், கடந்த ஆட்சியில் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இருந்த பொழுது தி.மு.க. அரசால் திட்ட மிடப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, கட்டப்பட்டது.

சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவான இந்த அறிவுசார் மையத்தை, தங்கள் சாதனை போல காட்டிக்கொள்ள, தற்போதைய முதலமைச்சர் விஜய் அவர்கள் கடந்த அக்டோபர் 16, 2026 அன்று வெறும் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். ஆனால் திறந்த சில நாட்களிலேயே, அங்குள்ள புத்தகக் கொள்முதலில் பெரும் முறைகேடு வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

த.வெ.க. அரசு இப்போது, "இது எல்லாம் முந்தைய தி.மு.க. ஆட்சியில் நடந்தது" என்று கூறி தப்பிக்க பார்க்கிறது. அது உண்மையா? இதோ நம்முடைய அடுக்கடுக்கான கேள்விகள், அவர்களின் குற்றச்சாட்டுகள், நம்முடைய பதில்கள்:

1. குற்றச்சாட்டு: பிப்ரவரியில் தி.மு.க. ஆட்சியில் தான் கொள்முதல் நடந்தது!

நம்முடைய பதில்: கொள்முதல் ஆணை வழங்கப்பட்டிருந்தால், அதை ஏன் இன்னும் வெளியிட வில்லை? ஆணை தேதி, கையெழுத்திட்ட அதிகாரி யார் என்பதை வெளியிடுங்கள். வெறும் வாய் வார்த்தையில் பழி போட முடியாது.

2. குற்றச்சாட்டு: போலி புத்தகங்களை தி.மு.க.தான் வாங்கியது!

நம்முடைய பதில்: அப்படியானால், ஜூன் 22, 2026 அன்று 'பெரியார் அறிவுலகம்' என்று முத்திரை குத்தி, அந்த புத்தகங்களை உள்ளே அனுமதித்தது யார்? அப்போது ஆட்சியில் இருந்தது தவெக தானே? சரிபார்க்காமல் முத்திரை குத்தியது யாருடைய நிர்வாகத் தவறு?

3. குற்றச்சாட்டு: தி.மு.க. காலத்தில் விலை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டது!

நம்முடைய பதில்: சந்தையில் 350க்கு கிடைக்கும் 'நாலடியார் வாழ்வின் வழிகாட்டி' புத்தகத்துக்கு 1,445 என்று பில் போட்டு, அதற்கு பணம் கொடுத்தது தவெக அரசு தான். பணம் கொடுப்பதற்கு முன் விலையை சரிபார்க்க வேண்டிய பொறுப்பு தற்போதைய அரசுக்கு இல்லையா?

4. குற்றச்சாட்டு: தி.மு.க. தான் அகல்விளக்கு, பீனிக்ஸ் பதிப்பகங்களை தேர்வு செய்தது!

நம்முடைய பதில்: தேர்வுக்குழு பரிந்துரைத்த அசல் பட்டியலை வெளியிடுங்கள். அந்த பட்டியலில் இல்லாத 1800+ புத்தகங்கள் எப்படி நூலகத்துக்குள் வந்தன? பரிந்துரைக்கப்படாத புத்தகங்களை உள்ளே விட்டது தவெக அதிகாரிகள் தானே?

5. குற்றச்சாட்டு: தி.மு.க. திட்டத்தில் ஊழல் இருந்தால் நாங்கள் என்ன செய்ய முடியும்?

நம்முடைய பதில்: இதுதான் முக்கியமான கேள்வி. சந்தேகம் இருந்திருந்தால், ஆட்சிக்கு வந்த உடனேயே மற்ற திட்டங்களை விசாரித்தது போல, இதையும் ஏன் விசாரித்து ரத்து செய்யவில்லை? 31.05.2026ல் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆய்வு, 07.06.2026ல் அமைச்சர் சம்பத் பேட்டி, 20.07.2026ல் புத்தக அடுக்கும் பணி, 22.08.2026ல் 80,000 புத்தகங்கள் தயார் என்று எல்லாம் தவெக ஆட்சியில் தான் நடந்தது. அப்போது கண்ணை மூடிக்கொண்டு இருந்தது யார்?



சைதை சாதிக்
(கழக செய்தி தொடர்பாளர்)

தி.மு.க. கட்டிய கட்டிடத்தில் நின்று கொண்டு, தி.மு.க. மீது பழி போட்டு தப்பிக்க முடியாது.

புத்தகங்களைப் பெற்றது நீங்கள், முத்திரை குத்தியது நீங்கள், அடுக்கியது நீங்கள், பணம் கொடுத்தது நீங்கள், திறந்து வைத்து விளம்பரம் தேடியதும் நீங்கள்.

ஊழலற்ற, நேர்மையான, வெளிப்படையான ஆட்சி என்று பேசி வந்த 'தூய சக்தி', இப்போது கொள்முதல் ஆணை முதல் கடைசி பணப் பரிவர்த்தனை வரை அனைத்தையும் தேதிவாரியாக வெளியிடத் தயாரா?

செங்குன்றத்தில் காவல் உதவி ஆய்வாளரை ஆயுதத்தால் தாக்க முயற்சி!

த.வெ.க. ஆட்சியில் போலீசாருக்கே பாதுகாப்பு இல்லை!

சென்னை, நவ.8-

த.வெ.க. ஆட்சியில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லை என்பதை, செங்குன்றம் அருகே நிகழ்ந்த சம்பவம் உறுதி செய்துள்ளது.

சென்னையை அடுத்த செங்குன்றம் பேருந்து நிலையம் அருகே கஞ்சா போதையில் இருந்த தினேஷ் என்ற இளைஞர் காவல் உதவி ஆய்வாளரை பயங்கர ஆயுதத்தால் தாக்க முயற்சித்துள்ளார். மேலும், அங்கிருந்த பொதுமக்களையும் கத்தியை காட்டி மிரட்டியுள்ளார். இதை யடுத்து தாக்குதல் சம்பவத்தை அங்கிருந்தவர்கள் செல்போனில் படம் பிடித்துள்ளனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் நிலையில், தவெக ஆட்சியில் போலீசாருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.



பண்டிகையை முன்னிட்டு, புதுக்கோட்டை மாநகரின் கீழ ராஜவீதி, வடக்கு ராஜவீதி உள்ளிட்ட மக்கள் அதிகளவில் கூடும் வணிகப் பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காவல்துறை மற்றும் மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.